**World Christian Fellowship**
www.wcflondon.com
wcflondon@gmail.com

# *கலாத்தியர்*
# *பாடம் 13 விசுவாசம் மூலம் நீதிமானாக்கப்படுதல்*

***கலாத்தியர் 2:15-19, புறஜாதியாரில் பிறந்த பாவிகளாயிராமல், சுபாவத்தின்படி யூதராயிருக்கிற நாமும் இயேசுகிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலேயன்றி, நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே மனுஷன் நீதிமானாக்கப் படுவதில்லையென்று அறிந்து, நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலல்ல, கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப் படும்படிக்குக் கிறிஸ்து இயேசுவின்மேல் விசுவாசிகளானோம்.16. நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே எந்த மனுஷனும் நீதிமானாக்கப்படுவதில்லையே. 17. கிறிஸ்துவுக்குள் நீதிமான் களாக்கப்படும்படி நாடுகிற நாமும் பாவிகளாகக் காணப்படுவோமானால், கிறிஸ்து பாவத்திற்குக் காரணரோ? அல்லவே.18. நான் இடித்துப்போட்டவைகளையே நான் மறுபடியும் கட்டினால், பிரமாணத்தை மீறுகிறவனென்று காணப்படுவேன்.19. தேவனுக்கென்று பிழைக்கும்படி நான் நியாயப்பிரமாணத்தினாலே நியாயப்பிரமாணத்திற்கு மரித்தேனே***

*கலாத்திய பகுதிகளில் உள்ள சபைக்கு சுவிசேஷம் தெரியும். அவர்கள் விசுவாசத்தின் மூலமே இரட்சிக்கப்பட்டார்கள் என்பதும் அவர்களுக்கு தெரியும். யூதர்களும் புறஜாதியினரும் அதை நன்றாக அறிவர். அதனால் தான் அவர்கள்*

*சுவிசேஷத்தை விட்டு விலகியதை பார்த்து பவுல் பேரதிர்ச்சியுற்றார்.*

*ஏன் நீங்கள் அவ்வாறு விலகி செல்கிறீர்கள்?*

*பேதுரு "நான் உண்மையான சுவிசேஷத்தை மறுதலிக்கவில்லை" என்று வெளிப்படையாக சொல்லவில்லை என்றாலும் அவர் நடந்து கொண்ட விதம் யூத மதவாதிகள் சொல்வது சரி என்பது போலவே இருந்தது.*

*இது மிகவும் ஆபத்தான சமரசம். எப்போதுமே ஒருவர் உண்மையான சுவிசேஷத்தை பிரசங்கிக்கும் போது மற்றவர் அதை உறுதி படுத்தி ஏற்றுக்கொள்வர் அல்லது கள்ள போதகம் பண்ணுவோர் அதை பொறுக்க முடியாமல் கொதித்தெழுவர், அதனால் குழப்பம் தான் எழும்.*

***2 கொரிந்தியர் 6:14, "அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக; நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தமேது? ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது**? "*

*அதனால் அப்போஸ்தலர் பவுல் பேதுருவை பார்த்து சொல்லுகிறார், நீங்கள் இதை செய்ய கூடாது என்று. அப்போஸ்தலர் 10ம் அதிகாரத்தில் நாம் பார்க்கிறோம், அவர்கள் கொர்நேலியு வீட்டிற்கு சென்று வந்தது முதல் எல்லாரும் புறஜாதியார் போல வாழ்கிறார்கள் என்று அந்தியோகியா சபையில் உள்ள அனைவரும் அறிவர். நீங்களும் இங்கே அந்தியோகியாவில் இதே போல்தான் வாழ்ந்தீர்கள். எல்லோருக்கும் தெரியும் நீங்கள் கிருபையின் சுவிசேஷத்தை பிரசங்கிக்கிறீர்கள், கிருபை மற்றும் விசுவாசத்தின் செய்தியை நீங்கள் உறுதிப்படுத்துகிறீர்கள் என்று. இப்பொழுது நீங்கள் யூத மதவாதிகளின் கையாளாக*

*செயல்படுகிறீர்கள், அவர்களோடு சேர்ந்து கொள்வதன் மூலம் அவர்கள் சரி என்பது போல் உள்ளது.*
*இது சுவிசேஷத்தின் ஒருமைப்பாட்டை அச்சுறுத்துகிறது. இது எப்போதும் சுவிசேஷத்தைப் பற்றியது. இது கடுமையான மீறல்.*

***வ 15-16, புறஜாதியாரில் பிறந்த பாவிகளாயிராமல், சுபாவத்தின்படி யூதராயிருக்கிற நாமும் இயேசு கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினாலேயன்றி, நியாயப் பிரமாணத்தின் கிரியைகளினாலே மனுஷன் நீதிமானாக்கப் படுவதில்லையென்று அறிந்து, நியாயப் பிரமாணத்தின் கிரியைகளினாலல்ல, கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத் தினாலே நீதிமான்களாக்கப்படும்படிக்குக் கிறிஸ்து இயேசுவின்மேல் விசுவாசிகளானோம். 16. நியாயப் பிரமாணத்தின் கிரியைகளினாலே எந்த மனுஷனும் நீதிமானாக்கப் படுவதில்லையே.***

*இங்கு நீதிமானாக்கப்படுதல் என்ற வார்த்தை 3 முறை இந்த இரண்டு வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது,மீண்டும் 21ம் வசனத்திலும் சொல்லப்பட்டுள்ளது. இது தான் முதன் முறையாக இப்படி ஒரு வார்த்தையை பவுல் இந்த கடிதத்தில் உபயோகப்படுத்துகிறார்.*

*பவுல் நீதிமானாக்கப்படுதல் குறித்த ஒரு கோட்பாட்டை விளக்கும் விதமாக ஒரு அறிக்கை விடுக்க போகிறார் அதன் மூலமாக கிருபைக்கும் நியாயப்பிரமாணத்திற்கும் மீது சுவிசேஷத்திற்கு உள்ள கண்ணோட்டத்தை அறிந்து கொள்ளலாம். பவுல் நீதிமானாக்கப்படுதல் குறித்த மிக முக்கியமான மிகவும் கருத்தாழம் கொண்ட கோட்பாட்டை கிருபை மூலமே என்று விளக்குகிறார்.*

## நீதிமானாக்கப்படுதல் குறித்த கோட்பாடு

*இதை நன்றாக புரிந்துகொள்ள இதில் உள்ள மாறுபாட்டைப் பார்ப்போம்.*

*நீதிமன்றத்தில் யாராவது உங்களை குற்றவாளியாக தீர்த்து தண்டனைக்குட்படுத்தினால் இதை நீங்கள் நன்றாக புரிந்து கொள்ள முடியும். அப்படியே இதற்கு எதிராக நீங்கள் ஒருவரால் நியாயப்படுத்தப்பட்டு நீதிமானாக்கப்பட்டால் எப்படி இருக்கும்.*

*நீதிமானாக்கப்படுதல் என்பது ஆக்கினைக்குட்படுத்தப் படுவதற்கு அப்படியே நேரெதிரானது.*

- ✓ *ஆக்கினைக்குட்படுத்தப்படுதல் உங்களை குற்றவாளியாக தீர்க்கும்.*
- ✓ *நீதிமானாக்கப்படுதல் உங்களை குற்றவாளியல்ல என்று தீர்க்கும்.*

- *நீங்கள் பொல்லாதவர் என்று ஆக்கினைக்குட் படுத்தப்படுதல் சொல்லும்.*
- *நீதிமானாக்கப்படுதல் உங்களை நீதிமான் என்று அழைக்கும்.*

- ❖ *நீங்கள் கெட்டவர் என்று ஆக்கினைக்குட் படுத்தப்படுததல் சொல்லும்,*
- ❖ *நீதிமானாக்கப்படுதல் உங்களை நல்லவர் என்று அழைக்கும் சட்ட ரீதியாக.*

*இது நீதிமன்றத்தில் பயன்படுத்தப்படும் சட்டப்பூர்வ சொல். ஒரு நபரை குற்றவாளியாகவோ நிரபராதியாகவோ தீர்க்க உபயோகப்படுத்துவர்.*

*வேதாகமத்தில் சொல்லப்பட்டுள்ள நீதிமானாக்கப்படுதல், தேவனுடைய கிருபையின் செயல்பாடு ஆகும்.*

*தேவன் பாவியை*

- *குற்றமற்றவனாக,*
- *மன்னித்து,*
- *பாவியை சரி செய்து மற்றும்*
- *அவனை ஒரு ஐக்கியத்தில் சேர்த்துக்கொண்டார்.*

*அது தான் உண்மையான மதம், கிறிஸ்தவம் மற்றும் சுவிசேஷத்தின் அடித்தளம்.*

*நாம் இந்த வேத பாடத்தை யோபு 25 ல் பில்தாத் என்பவரால் கேட்கப்பட்ட கேள்வியின் மூலம் ஆரம்பித்ததை நினைவு கூறுங்கள்?*

**யோபு *25:4,* இப்படியிருக்க, மனுஷன் தேவனுக்கு முன்பாக நீதிமானாயிருப்பது எப்படி? ஸ்திரீயினிடத்தில் பிறந்தவன் சுத்தமாயிருப்பது எப்படி?**

*ஆக்கினைக்கு என்று தீர்க்கப்பட்டவர் எப்படி நீதிமானாக தீர்க்கப்பட முடியும்?*

*பவுல் அதற்கு பதில் கூறுகிறார். "இயேசுவின் மேல் உள்ள விசுவாசத்தின் மூலம் மாத்திரமே, விசுவாசத்தின் மூலமாக மட்டுமே. கிரியைகளினால் அல்ல".*

*எனவே இங்கு நாம் விசுவாசத்தின் மூலமே நீதிமானாக்கப்படுகிறோம் என்ற சொற்றொடரை காண முடியும். ஆனால் இங்கு பவுல் எப்படி யூதர்களின் வாதத்திற்கு எதிராக வாதாடுகிறார் என்று காண முடியும்.*

***வ 15, "புறஜாதியாரில் பிறந்த பாவிகளாயிராமல், சுபாவத்தின்படி யூதராயிருக்கிற நாமும்,"***

*இதன் அர்த்தம் யூத கிறிஸ்தவர்களான பேதுரு, பர்னபாஸ், பவுல் மற்றும் மற்ற யூத விசுவாசிகளும் நாம் இருப்பது போலவே அந்தியோகிய சபையில் இருந்தனர்.*

*ஆபிரகாமின் சந்ததியாகிய நாமெல்லோரும் சுவாபத்தின்படி யூதராய் இருக்கிறோம் என்று பவுல் சொல்லுகிறார்.*

- ❖ *நாமெல்லோரும் நம்முடைய வாழ்க்கையில் நியாயப்பிரமணத்திற்கு கீழ்பட்டவர்களாய் வாழ்ந்தோம்.*
- ❖ *வேதத்தில் சொல்லப்பட்ட படியான வாழ்க்கை நாம் வாழ்ந்தோம்.*
- ❖ *நமக்கு யூத முறைமை பற்றி நன்கு தெரியும்.*
- ❖ *யூத மத முறைமை, யூதருடைய கலாச்சாரத்தை மேற்கொண்டது.*
- ❖ *நாம் ஒரே ஆத்துமாவாய், ஒரே தேவனை வணங்க கூடியவர்களாய், அசைக்க முடியாத முறைமை கொண்டவர்கள்.*
- ❖ *புறஜாதிகளிடத்தில் உள்ளபடி நம்மிடத்தில் பல்வேறு மதங்கள் இல்லை.*
- ❖ *யூத முறைமை (Judaism)என்னும் ஒரே மதம் நமக்கு இருந்தது.*

*நாம் அதற்கு உட்பட்டவர்களாய் வாழ்ந்தோம் எனவே நாம் புறஜாதிகள் போல் பாவிகளாய் அல்ல.*

*நீங்கள் பாவிகள் இல்லை என்பதன் அர்த்தம் என்ன?*

*பவுல் என்ன சொல்லுகின்றார் என்றால் வெளியரங்கமான பகிரங்கமான யூதர்களின் வாழ்க்கை அவர்களுடைய மதத்தை கட்டிக்கொடுப்பதாக இருக்கின்றது.*

*யூத மதம் யூதர்களை கட்டுப்படுத்தியது.*

*புறஜாதியார்கள் பாவிகள் என்று அழைக்கப்பட்டனர் ஏனென்றால் அவர்கள் கட்டுப்பாடு இல்லாமல் வாழ்ந்தார்கள்.*

- *புறஜாதியார்கள் பல மதங்களை பின்பற்றினர், பல தெய்வங்கள், கோடிக்கணக்கானவைகள் இருந்தன.*
- *அவர்களின் தெய்வங்கள் கேடுகெட்டவைகள்.*
- *அவர்களின் தெய்வங்கள் ஒழுக்கம் இல்லாதவைகள்.*
- *அவர்களின் வழிபாட்டு கோயில்கள் விபச்சாரங்கள் நிறைந்தவை.*
- *புறஜாதியினரின் மதங்கள் முரடானவை, ஒழுக்க கேடானவை.*

*எனவே பவுல் சொல்லுகிறார் நாம் அவர்களை போல் அல்ல என்று பவுல் சொல்லுகிறார். நியாயப்பிரமணத்திற்கு கீழ் நாம் வாழ வேண்டும் என நமக்கு தெரியும்.*

*நாம் புறஜாதியை சேர்ந்த பாவிகளை போல் வாழவில்லை.*

- ✓ *நியாயப்பிரமாணம் நம்மை தடை செய்து நம்மை கட்டுப்படுத்தியது.*

- ✓ *நாம் தேவனை நேசித்து அவரின் கற்பனைகளை கட்டளைகளை கடைபிடிக்க முயற்சி செய்தோம்.*
- ✓ *நாம் உபவாசித்தோம், ஜெபித்தோம் மற்றும் காணிக்கைகளை கொடுத்தோம்.*

*நியாயப்பிரமாணத்திற்கு கட்டுப்பட்டு வாழ்வதன் மூலம் அவர்கள் என்ன கற்றுக்கொண்டனர்?*

***வ16, நியாயப்பிரமாணத்தின் மூலமாய் மனுஷன் நீதிமானாக்கப்படுவதில்லை என்பதால் இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தின் மூலமே ஆகும். நாம் இயேசுவின் மேல் விசுவாசம் வைத்திருந்தும் கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தின் மூலமாய் மட்டுமே நீதிமானாக்க பட முடியும் ,நியாயப்பிரமாணத்தின் கிரியைகள் மூலமாய் அல்ல. அவைகளின் மூலம் மனுஷர் நீதிமானாக்கப்படுவதில்லை.***

*இவைகள் மூலமாய் நாம் அறிவது நியாயப்பிரமாணத்தின் கிரியைகள் மூலமாய் மனுஷன் நீதிமானாக்கப்படுவதில்லை.*

*நியாயப்பிரமாணங்களை நீங்கள் கண்காணிக்க வேண்டும் என்று யூதர்கள் சொல்லுகிறார்கள். பவுல் சொல்லுகிறார் அதையெல்லாம் நாம் கடைபிடித்தவர்கள். நாம் அவைகள் மூலம் நம் சுய நீதியை வெளிப்படுத்த முயன்றோம்.*

***ரோமர் 10:3, எப்படியென்றால், அவர்கள் தேவநீதியை அறியாமல், தங்கள் சுயநீதியை நிலைநிறுத்தத் தேடுகிறபடியால் தேவநீதிக்குக் கீழ்ப்படியாதிருக்கிறார்கள்***

*பிலிப்பாய் பட்டணத்திற்கு பவுல் கடிதம் எழுதும் போது தன்னுடைய சொந்த சாட்சியை கூறுகிறார்.*

***பிலிப்பியர் 3:3-10, 3. ஏனெனில், மாம்சத்தின்மேல் நம்பிக்கையாயிராமல், ஆவியினாலே தேவனுக்கு ஆராதனை செய்து, கிறிஸ்து இயேசுவுக்குள் மேன்மைபாராட்டுகிற நாமே விருத்தசேதனமுள்ளவர்கள்.4. மாம்சத்தின்மேல் நம்பிக்கை வைக்கவேண்டுமானால் நானும் வைக்கலாம்; வேறொருவன் மாம்சத்தின்மேல் நம்பிக்கையாயிருக்க நினைத்தால் நான் அதிகமாய் அப்படிச் செய்யலாம். 5. நான் எட்டாம் நாளில் விருத்தசேதனமடைந்தவன், இஸ்ரவேல் வம்சத்தான், பென்யமீன் கோத்திரத்தான், எபிரெயரில் பிறந்த எபிரெயன், நியாயப்பிரமாணத்தின்படி பரிசேயன்; 6. பக்திவைராக் கியத்தின்படி சபையைத் துன்பப்படுத்தினவன், நியாயப் பிரமாணத்திற்குரிய நீதியின்படி குற்றஞ்சாட்டப்படாதவன்.7. ஆகிலும், எனக்கு லாபமாயிருந்தவைகளெவைகளோ அவைகளைக் கிறிஸ்துவுக்கு நஷ்டமென்று எண்ணினேன்.8. அதுமாத்திரமல்ல, என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக்கொண்டிருக்கிறேன்.9. நான் கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கும், நியாயப் பிரமாணத்தினால் வருகிற சுயநீதியை உடையவனாயிராமல், கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் வருகிறதும் விசுவாசமூலமாய் தேவனால் உண்டாயிருக்கிறதுமான நீதியை உடையவனாயிருந்து, கிறிஸ்துவுக்குள் இருக்கிறவனென்று காணப்படும்படிக்கும், 10. இப்படி நான் அவரையும் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும், அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அறிகிறதற்கும், அவருடைய மரணத்திற்கொப்பான மரணத்திற்குள்ளாகி, எப்படியாயினும் நான் மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்திருப்பதற்குத் தகுதியாகும்படிக்கும்,***

*பவுல் சொல்லுகிறதை சுருக்கமாக சொல்லவேண்டுமானால் நாம் நம் சுய நீதியை வெளிக்காட்ட எல்லா வித ஆர்வத்தோடும் செய்தோம்.*

*மனுஷன் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளின் மூலம் நீதிமானாக்கப்படவில்லை என்பது தெரிகிறது அதனால் தான் நாம் கிறிஸ்துவிடம் சென்றோம், கிறிஸ்தவர்களாக உள்ளோம்.*

*பிரமாணங்களை கடைபிடிப்பது வெளியரங்கமான கிரியை ஆகும். இயேசு இதை மலை பிரசங்கத்தில் விவரித்துள்ளார்.*

- ✓ *நீங்கள் வெளியரங்கமாக ஒருவரை கொல்லாவிட்டாலும், ஒருவரை பகைத்தால் இருதயத்தில் நீங்கள் கொலையாளிகள் தான்.*
- ✓ *நீங்கள் வெளியரங்கமாக விபச்சாரம் செய்யாவிட்டாலும், இச்சையோடு பார்த்தாலே இருதயத்தில் விபச்சாரம், வேசித்தனம் செய்தாயிற்று.*

*மனுஷன் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளின் மூலம் நீதிமானாக்கப்படவில்லை,*

*எனவே நாம் என்னத்தை கண்டு பிடித்தோம்?*
**கிறிஸ்து இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தின் மூலமே".**
*அதனால் தான் நாம் கிறிஸ்தவர்கள்.*

*நியாயப்பிரமாண கட்டுகளை உடைக்கத்தான் அவர் சிலுவையில் மரித்தார். நியாயப்பிரமாண மீறுதலினால் உண்டான தண்டனையை அவர் ஏற்றார். நம்முடைய பாவங்களை அவர் தம் சரீரத்தில் சுமந்து சிலுவையில் தீர்த்தார். அவர் நமக்காக பாவமானார்.*

*நாம் செய்ய வேண்டியது என்னவென்றால் நம்முடைய பாவம் நீங்கி நீதிமானாக்கப்பட்டோம் என்பதை அறிந்து நம் சுய சித்தம், சுய கிரியை, மற்றும் சுய நீதியிலிருந்து மனம்*

*திரும்ப வேண்டும். நம்முடைய முழு நம்பிக்கையையும் இயேசு கிறிஸ்துவின் கிரியைகள் மேல் வைத்துவிட வேண்டும்.*

*நாம் அதை செய்தோம். நாம் நீதிமானாக்கப்பட்டதை விசுவாசித்தோம், நமக்கு பரிசுத்த ஆவியானவர் கொடுக்கப்பட்டார் மற்றும் தேவன் நமக்கு கொடுத்த வாழ்க்கையை நாம் வாழ்ந்து கொண்டு இருக்கிறோம்.*

*நிக்கோதேமு யூதர்களின் ஆட்சியாளராக இருந்தார். அவர் ஒரு பரிசேயன், எருசலேமில் உள்ள உயர்ந்த தலைவர்களில் அவரும் ஒருவர். அவர் சட்டதிட்டங்களை மிக தீவிரமாக பின்பற்றியவர். பரிசேயர்கள் மிக தீவிரமாக சட்டதிட்டங்களை பின்பற்றுபவர்கள்.*

*அப்படி மிக தீவிரமாக சட்டதிட்டங்களை பின்பற்றும் நிக்கோதேமு இயேசுவிடம் தன் இருதயத்தில் ஒரு கேள்வியுடன் வருகிறார், "நித்திய ஜீவனை பெற்றுக்கொள்ள நான் என்ன செய்யவேண்டும்? என்று''*

*ஒரு சாதாரண மனிதன் சட்டதிட்டங்களை பின்பற்ற செய்யும் முயற்சியில் மிகவும் உச்சகட்ட எல்லையை பின்பற்றும் ஒரு யூதர் அவர். **தான் தேவனுடைய ராஜ்யத்தில் இல்லை என்று** அவருக்கு தெரிந்தது. உடனே இயேசு அவருக்கு, நீ இதை பெற்றுக்கொள்ள இன்னும் இவையெல்லாம் செய்ய வேண்டும் என்று சொல்லாமல் மாறாக "**நீ மீண்டும் பிறக்க வேண்டும்"** என்றார்.*

*நீங்கள் உங்கள் வாழ்க்கையில் எப்பேர்ப்பட்ட கிரியைகளை செய்து குவித்தாலும் அவை வீணே. நீங்கள் நரகத்திற்கு அவ்வளவு சீக்கிரம் சென்று கொண்டு இருக்கிறீர்கள் என்று அர்த்தம்.*

*“அது எப்படி சாத்தியமாகும்” என்று நிக்கோதேமு கேட்கிறார்.*

*அதற்கு இயேசு, “**நீ மீண்டும் பிறக்க வேண்டும், இது உன்னால் கூடாது, தேவனால் மட்டுமே கூடும்** என்றார்.*

*எல்லா பாவிகளும் தேவனிடம் எனக்கு வாழ்க்கையை தாரும் என்று கதற தான் முடியும்.*

***“எனவே நியாயப்பிரமான கிரியைகளால் மனுஷன் நீதிமானாக்கப்படுவதில்லை.”***
*அது சாத்தியமே இல்லை.*

*பவுல் சொல்லுகிறார் நாம் அவைகளை பின்பற்றினோம், சட்டதிட்டங்களுக்கு கட்டுப்பட்டு வாழ்ந்தோம் அவைகள் நம்மை ஆக்கினைக்குள்ளாக மட்டுமே தீர்த்தது.*

***“மனுஷன் நீதிமானாக்கப்படுவதில்லை**”, இதை பவுல் மூன்று முறை இந்த இரண்டு வசனங்களில் குறிப்பிடுகிறார்.*

*பவுலின் பேச்சுக்கு எதிர்வினை.*

***வ** 17, **“கிறிஸ்துவுக்குள் நீதிமான்களாக்கப்படும்படி நாடுகிற நாமும் பாவிகளாகக் காணப்படுவோமானால், கிறிஸ்து பாவத்திற்குக் காரணரோ? அல்லவே**!*

*ஒரு விவாதத்திற்காக யூத மதவாதிகளின் குறிப்புகளை காண்போம். ஜுடேசர்ஸ் சொல்ல வருவது என்னவென்றால்: “நீங்கள் விசுவாசம் மட்டும் வைத்தால் இரட்சிக்கப்பட முடியாது, நீங்கள் திரும்பவும் நியாயப்பிரமாணங்களை கடைபிடிக்க வேண்டும், விருத்தசேதனம் பண்ணவேண்டும், சட்டங்களுக்கு கீழ்ப்பட்டிருக்க வேண்டும்.”*

*எனவே பவுல் சொல்லுகிறார், ஜுடேசர்ஸ் சொல்லுவது சரியானால் கிறிஸ்து பாவத்திற்கு காரனாக இருப்பார், ஏனென்றால் அவர் இரட்சிக்கப்பட தன் தம்மேல் விசுவாசம் மட்டும் வைத்தால் போதும் என்கிறாரே. எனவே நாம் அவ்வாறே விசுவாசம் வைத்து, அவரின் கிருபையை பெற்று, விசுவாசத்தை தழுவி வாழ்கிறோம். ஜுடேசர்ஸ் சொல்லுகிறார்கள் நாம் நியாயப்பிரமாணத்தை பின்பற்றாவிட்டால் பாவிகள் என்று. கிறிஸ்து நம்மை விடுதலையாக்கி பாவத்திற்கு வழிவகுத்தார்.*

*ஜுடேசர்ஸ் சொல்லுவது சரியானால் விசுவாசத்தின் மூலம் கிரியைகள் இல்லாமல் கிறிஸ்துவால் நீதிமானாக்கப்படுவது, நம்மை பாவிகளாக மாற்றிவிடும் ஏனென்றால் நீங்கள் பிரமாணங்களை பின்பற்றவில்லை, எனவே நீங்கள் கிறிஸ்து நம்மை பாவிகளாக்கினார் என்று சொல்ல போகிறீர்களா?*

***கலாத்தியர் 5:1, ஆனபடியினாலே, நீங்கள் மறுபடியும் அடிமைத்தனத்தின் நுகத்துக்குட்படாமல், கிறிஸ்து நமக்கு உண்டாக்கின சுயாதீன நிலைமையிலே நிலை கொண்டிருங்கள்.***

*எனவே நீங்கள் சொல்லுகிறீர்கள், மீண்டும் சட்டதிட்டங்களுக்கு செல்லாவிட்டால் கிறிஸ்து நம்மை பாவிகள் ஆக்கினார் என்று, அதனால் கிறிஸ்து பாவத்திற்கு காரணர் என்று சொல்ல முற்படுகிறீர்களா?”*

*பவுல் தன் உடன் போதகராய் பல வருடங்கள் இருந்த பேதுரு மற்றும் பர்னபாவிடம் பேசுகிறார்.*

*பவுல் அவர்களை பார்த்து நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்று கேட்கிறார்?*
*நீங்கள் கிறிஸ்துவை ஆக்கினைக்குள்ளாக தீர்க்கிறீர்கள்.*

*மிகவும் தைரியமான ஒரு பேச்சு.*

*பேதுரு, பர்னபா மற்றும் மற்றவர்கள் சிறப்பு கூட்டத்தில் புறஜாதியினருடன் சேர்ந்து சாப்பிட்டது கிறிஸ்து இயேசுவுக்குள் விசுவாசத்தின் மூலம் அவர்களை சகோதர சகோதரிகளாக ஏற்றுக்கொண்டதால் மட்டுமே. அதுவே சரியானது.*

*அனால் பர்னபாவும் பேதுருவும் மற்றவர்களும் யூத மதவாதிகளுடன் சேர்ந்து கொண்டால் அப்போஸ்தலர் 10ம் அதிகாரத்திலிருந்து பார்க்கிறோம் அந்தியோகியாவில் அவர்கள் கிறிஸ்து மூலம் பெற்றுக்கொண்ட சுயாதீனத்தை அனுபவிப்பது பாவம் என்று சொல்ல முற்படுவது போல் உள்ளது. எனவே கிறிஸ்து அவர்களை பாவத்திற்கு ஊக்குவித்தார். அவ்வாறு கூறுவதால் நீங்கள் நியாயப்பிரமாணங்களிலிருந்து விடுதலை பெற வைத்து, கிறிஸ்து உங்களை மிகவும் மோசமான பாவியாக்கினார் என்று அர்த்தம்.*

*இல்லை, கிறிஸ்து பாவத்திற்கு காரணர் அல்லவே, ஜுடேசர்கள் தான் பாவத்திற்கு காரணர்.*

**வ *18*, நான் இடித்துப்போட்டவைகளையே நான் மறுபடியும் கட்டினால், பிரமாணத்தை மீறுகிறவனென்று காணப் படுவேன்**

*இயேசு நம்மை விடுதலை ஆக்கி பிரமாணத்தை மீறுகிறவர் அல்ல, திரும்பவும் நியாயப்பிரமாணங்களுக்கு உட்படுத்துகிற நீங்கள் தான் பிரமாணத்தை மீறுகிறவர்கள்.*
*கிருபையின் சுவிசேஷத்தால் நீங்கள் இடித்தவைகளையே திரும்ப கட்டுகிறீர்கள்.*

**வ *19,* தேவனுக்கென்று பிழைக்கும்படி நான் நியாயப் பிரமாணத்தினாலே நியாயப்பிரமாணத்திற்கு மரித்தேனே**

*பவுல் சொல்லுகிறார் "இது ஒரு வரலாற்று மிக்க செயல், நான் நியாயப்பிரமாணத்திற்கு மரித்தேன்."*

*ஒரு கிறிஸ்தவனாக நாம் நம்முடைய வாழ்க்கையை நியாயப்பிரமாணம் கொண்டு வாழ்வது இல்லை.*

*சட்டத்தை பின்பற்றுகிறவர்கள் தங்கள் வாழ்க்கையை நியாயப்பிரமாணத்தை கடைபிடிப்பதன் மூலம் வர்ணிக்கின்றனர்.*

*கிறிஸ்தவர்கள் தங்களுடைய வாழ்க்கையை நியாயப்பிரமணத்தோடு சம்பந்தம்படுத்தி வரையறுப்பது இல்லை, மாறாக கிறிஸ்துவுடன் உள்ள ஐக்கியத்தின் மூலம் வரையறுக்கிறார்கள்.*

*நான் நியாயப்பிரமாணத்திற்கு மரித்தேன், அது இனிமேல் என்மேல் அதிகாரம் செலுத்த முடியாது. அது இனிமேல் என்னை ஆக்கினைக்குள்ளாக நியாயம் தீர்க்கும் சிங்காசனத்தில் வீற்றிருக்க முடியாது. நான் நியாயப்பிரமாணத்திற்கு மரித்தேன். இது ஒரு வரலாறு சிறப்புமிக்க காரியம்.*

*இரட்சிக்கப்படும் போது நான் இயேசுவை விசுவாசித்த அந்நேரமே நான் நியாயப்பிரமாணத்திற்கு மரித்தேன்.*

*நியாயப்பிரமணத்திற்கும் எனக்கும் இனி எந்த சம்மந்தமும் இல்லை.*

- *இனி விருத்தசேதனத்தோடு சம்மந்தம் இல்லை*
- *இனி ஓய்வு நாட்களோடு சம்மந்தம் இல்லை,*

- *இனி விழாக்களோடு சம்மந்தம் இல்லை,*
- *இனி பண்டிகைகளோடு சம்மந்தம் இல்லை, மற்றும்*
- *இனி புதிய நிலவுகளோடு சம்மந்தம் இல்லை.*

*கொலோசெயர் 2ல் பவுல் இதை மிக சுருக்கமாக கூறுகிறார்*

- *இதனால் நான் ஒரு கீழ்படியாத வாழ்க்கை வாழ்கிறேன் என்று அர்த்தம் அல்ல இதுவரை இருந்ததற்கு எதிர்மறையாக வாழ்கிறேன் என்று அர்த்தம்.*
- *இப்பொழுது எனக்கு புதிய எஜமான் இயேசு இருக்கிறார்.*
- *அவரை நான் முழு அன்போடு நேசிக்கிறேன், பிரமாணத்தின் மேலுள்ள ஏதோ ஒரு பயத்தோடு அல்ல.*

*நியாயப்பிரமாணம் என் வாழ்க்கையை நிர்ணயிப்பதில்லை.*
*நான் சட்டங்களுக்கு உட்பட்டவன் அல்ல.*
*நான் நியாயப்பிரமாணத்தை நோக்கி வாழவில்லை, நான் தேவனுக்காக வாழ்கிறேன்.*

*அது எப்படி நடந்தது?*

*நியாயப்பிரமாணத்தை சார்ந்த வாழ்க்கையை விட்டு நீங்கள் எப்படி வெளியேறினீர்கள்?*

*விருத்தசேதனம், எல்லா கட்டுப்பாடுகள், எல்லா பண்டிகைகள், எல்லா சடங்குகள், இவையெல்லாம் எப்படி பூர்த்தி செய்யப்படும்?*

*எப்படி அவற்றிலிருந்து வெறும் ஆண்டவருக்காய் வாழ்ந்தால் போதும் என்ற நிலைமைக்கு சென்றீர்கள்?"*

***வ 20, கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்***

*ஒரு கிறிஸ்தவன் எப்படி இருக்க வேண்டும் என இந்த வசனம் வரையறுக்கிறது.*

*நீங்கள் கிறிஸ்துவோடு கூட சிலுவையில் அறையப்பட்டீர்கள்.*

*நீங்கள் கிறிஸ்துவோடு கூட உயிர்தெழுந்தீர்கள்.*

*இனி வாழ்வது நீங்கள் இல்லை,*

*உங்களுக்குள் கிறிஸ்துவே வாழ்கிறார்*

*நீங்கள் இப்பொழுது வாழ்ந்து கொண்டு இருக்கும் வாழ்க்கையில் நியாயப்பிரமாணத்திற்கு கீழ்பட்டவர்கள் அல்ல,*

*உங்களை நேசித்து உங்களுக்காக தன்னையே தந்த தேவா குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தால் மட்டுமே நீங்கள் பிழைத்த இருக்கிறீர்கள்.*

*வசனம் 19, 20 ஐ அடுத்த பாடத்தில் பார்க்கலாம்.*